1971 டிசம்பர் 4]

சப்ளிமெண்டரி இல்லாமல் போகிறது. இப்பொழுதுகூட கேள்விநேரம் முடியப் போகிறது. இன்றைக்கு 30 கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விகள் எல்லாவற்றையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமா அல்லது நாளைக்கு ஒற்றி வைக்கலாமா என்பதை அவையின் யோசனைக்கு விட இருக்கிறேன். கடந்த காலத்தில் இவ்வளவு கேள்விகள் அரசாங்கத்தின் சார்பில் வரவில்லை. இப்பொழுது 400 கேள்விகள், 500 கேள்விகள் என்று அதிகாரிகள் பதில் அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு துணைக் கேள்வி, இரு துணைக் கேள்விகள் என்று கொடுத்து 4, 5 கேள்விகளோடு முடித்துக் கொண்டு, பாக்கியுள்ள 300, 400 கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் விட்டுவிடலாமா என்று—திரு. சுப்புவின் முன்னால் அல்ல—சட்டப் பேரவையின் முன்னால் வைக்கப்பட வேண்டிய பிரச்சினை. அவர்கள் இந்த அவையின் நேரத்தைக் எடுத்துக் கொண்டார்களே தவிர, எந்த ஒழுங்குப் பிரச்னையையும் எழுப்பவில்லை.

THIRU K. SUPPU : Sir, one explanation . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முடிவு சொன்னதற்குப் பிறகு அதைப்பற்றி விவாதங்கள் முடிந்து விட்டன என்பது பொருள், இந்த நிலைமையைப் பொறுத்தவரையில். வேறு ஏதாவது பிரச்னையிருந்தால் சொல்ல வேண்டுமே தவிர இதற்குத் தொடர்ந்து விளக்கம் அளிப்பது, வியாக்கியானம் அளிப்பது என்பது சட்டமன்ற மரபுகளுக்கு உகந்தது அல்ல.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

* 88 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தாலுக்கா அளவில் கூட்டுறவு யூனியன்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆம். இதுவரை 56 தாலுக்கா யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: அத்தகைய யூனியன்கள் கூட்டுறவுத் துறை பற்றிய சாதனைகளைக் கிராமப் புறங்களில் விளக்கிக் காட்டுவதற்காகப் பிரச்சாரம் செய்தல், நாடகம் நடத்துதல், சினிமாக் காட்டுதல் போன்ற காரியங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்டுச் செயல்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர்கள் சொன்ன அந்தக் காரியத்திற்காகத்தான் கூட்டுறவு யூனியன்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.